டிஜிட்டல் டெய்லி
Kaalaimani.com
காலைமணி.காம்
11.7.2023 செவ்வாய்க்கிழமை • மதுரை • பக்கங்கள் 26 • Online Edition • www.kaalaimani.com

### 500 பெண் ஓட்டுநர்களுக்கு

# புதிய ஆட்டோ ரிக்சா வாங்குவதற்காக மானியம் வழங்கும் திட்டம் தொடக்கம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

சென்னை, ஜூலை 10

தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தின் சார்பில் 500 பெண் ஒட்டுநர்களுக்கு புதிய ஆட்டோ ரிக்சா வாங்குவதற்காக தலா 1 லட்சம் மானியம் வழங்கும் திட்டத்தினை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

இது குறித்து தமிழக அரசு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

தமிழக முதலர்வர் மு.க. ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு அமைப்புசாரா ஒட்டுநர்கள் மற்றும் தானி யங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தின் சார்பில் பதிவு பெற்ற 500 பெண் ஒட்டுநர்களுக்கு புதிய ஆட்டோ ரிக்சா வாங்குவதற்காக தலா 1 லட்சம் மானியம் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்து, 10 பயனாளிகளுக்கு இத்திட்டத்தின் கீழ் வாங்கப்பட்ட புதிய ஆட்டோ ரிக்சாக்களுக்கான பதிவு சான்று மற்றும் அனுமதி ஆவணங்களை வழங்கினார்.

அமைப்புசாரா தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பினை உறுதி செய்திடவும், அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் வகை யில் நல உதவிகள் வழங்கிடவும், தமிழ்நாடு அரசால் 18 அமைப்பு சாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள் அமைக்கப்பட்டு சிறப்புடன் செயல்பட்டு வருகின்றன. இவ்வரசு பொறுப்பேற்ற 7.05.2021 முதல் 31.05.2023 வரை, அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் 13,80,695 தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டு, 11,81905 பயனாளிகளுக்கு 914.27 கோடி ரூபாய்

நலத்திட்ட உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தின் சார்பில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு கல்வி, திருமணம் மற்றும் மகப்பேறு உதவித்தொகை, ஓய்வூதியம், கண் கண்ணாடி வழங்குதல், விபத்து மற்றும் இயற்கை மரணங்களுக்கான நிவாரண நிதியுதவி போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஒஇவ்வாரியத்தில் தற்போது 1,74,230 தொழிலாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.






தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற பண் ஒட்டுநர்கள் சொந்தமாக ஆட்டோ ரிக்சா வாகனம் வாங்குவதை ஊக்குவிக்கவும், அவர்களுக்கான தொழில் வாய்ப்பினை உருவாக்கிடவும், அவர்களின் வருமானம் ஈட்டும் திறன் மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டும், 500 பெண் ஒட்டுநர்களுக்கு புதியதாக ஆட்டோ ரிக்சா வாகனம் வாங்கும் செலவினத்தில் தலா 1 லட்சம் ரூபாய் மானியமாக வழங்கும் திட்டத்தை முதல்வர் இன்றையதினம் தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின் கீழ் மானியத்திற்கு ஒப்பளிப்பு செய்யப்பட்ட 141 பயனாளிகளில் பத்து பயனாளிகளுக்கு இத்திட்டத்தின் கீழ் வாங்கப்பட்ட புதிய ஆட்டோ ரிக்சாக்களுக்கான பதிவு சான்று மற்றும் அனுமதி ஆவணங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சிவ. கணேசன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர், முகமது நசிமுத்தின், முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர் அதுல் ஆனந்த், ஆகியோர் கலந்து கொண்டனர்.

kaalaimani.com in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Phone: 4366425.

# மத்ஸய சம்பதா திட்டத்தின் கீழ், மீன் நோய்கள் பற்றி விரைவாகப் புகாரளிப்பதற்கு செயலி உருவாக்கம்

புது தில்லி, ஜூலை 10

விலங்கு புரதம் மற்றும் ஒமேகா 3-கொழுப்பு அமிலங்களின் ஆரோக்கியமான ஆதாரங்களில் ஒன்றாக மீன் கருதப்படுகிறது. ஊட்டச்சத்து குறைபாட்டைத் தணிக்க மகத்தான ஆற்றலை வழங்குகிறது. மீன் வளர்ப்பு வேகமாக வளர்ந்து வரும் உணவு உற்பத்தித் துறைகளில் ஒன்றாகும். மீன்வளத்துறை நாட்டில் உள்ள சுமார் 3 கோடி மீனவர்கள் மற்றும் மீன் விவசாயி களுக்கு வாழ்வாதாரத்தையும் வேலை வாய்ப்பையும் வழங்குகிறது. இத்துறையின் வளர்ச்சிக்கான அபரிமிதமான சாத்தியக் கூறுகளை முன்னறிவித்து, நீலப் புரட்சியைக் கொண்டுவருவதற்காக, மத்திய அரசு, ரூ 20,050 கோடி முதலீட்டுடன் பிரதமரின் மத்ஸய சம்பதா திட்டம் என்ற முதன்மைத் திட்டத்தை அறிவித்துள்ளது.

மீன் வளர்ப்பின் வளர்ச்சிக்கு நோய்கள் கடுமையான தடையாக உள்ளது, நோய் கண்காணிப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து, ஹைதரா பாத்தில் உள்ள தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் மூலம் கால் நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை அமைச்சகம், விவசாயம் மற்றும் விவசாயிகள் நலன் ஆகிய வற்றின் மூலம் நீர்வாழ் விலங்கு நோய்களுக்கான ஒரு லட்சிய தேசிய கண் காணிப்புத் திட்டம் ஆதரிக்கப்பட்டது. இந்தத் திட்டம் மீன் வளர்ப்பு முக்கியத்துவம் வாய்ந்த 14 மாநிலங்களில் தொடங்கப்பட்டது .

பிப்ரவரி 27, 2023 அன்று சென்னையில் மத்திய அரசின் மீன் வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் பர்ஷோத்தம் ரூபாலா அவர்களால் இந்தத் திட்டம் வெற்றிகரமாக தொடங்கப்பட்டது. விவசாயிகளை மேலும் வலுப்படுத்தும் திட்டத்தின் கீழ், மீன் நோயைப் புகாரளி என்ற செயலி உருவாக்கப் பட்டுள்ளது. இந்தச் செயலி சமீபத்தில் அமைச்சர் பர்ஷோத்தம் ரூபாலாவால் தொடங்கப்பட்டது. புதுமையான செயலியைப் பயன்படுத்தி, விவசாயிகள் தங்கள் பண்ணைகளில் உள்ள மீன், இறால் மற்றும் மொல்லஸ்க்களில் ஏற்படும் நோய்களைக் கள மட்ட அலுவலர்கள் மற்றும் மீன் சுகாதார நிபுணர்களிடம் தெரிவிக்கலாம் மற்றும் தங்கள் பண்ணைகளில் ஏற்படும் நோய் பிரச்சனையை விரைவாகத் தீர்க்க அறிவியல் ஆலோசனைகளைப் பெறலாம். மீன் விவசாயிகள், கள அளவிலான அதிகாரிகள் மற்றும் மீன் சுகாதார நிபுணர்களை இணைக்கும் மைய தளமாக இந்த செயலி இருக்கும்.

காலைமணி.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# ரூ.2.40 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக வளாகம்: முதல்வர் திறப்பு

சென்னை, ஜுலை 10

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் சார்பில் திருவள்ளூர் மாவட்டம், பெரும்பாக்கம் கிராமத்தில் 2 கோடியே 40 லட்சத்து ரூ.15 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக வளாகக் கட்டடத்தை திறந்து வைத்தார்.




தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையானது தொழிலாளர் சட்டங்களை அமல்படுத்துவதன் வாயிலாகவும், பல்வேறு சமூகப் பாதுகாப்பு திட்டங்களை செயல்படுத்துவதன் வாயிலாகவும் பரந்த மற்றும் பன்முகத்தன்மையுடைய அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாரா உழைக்கும் வகுப்பினரின் நலனை மேம்படுத்தும் நோக்கில் பணியாற்றி வருகிறது. மேலும், தொழிலாளர்களை பாதுகாத்தல், நியாயமான, பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான பணியிடத்தை உறுதி செய்வதன் வாயிலாக உற்பத்தியை பெருக்குதல், தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியத்தை உறுதி செய்தல், துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில், திருவள்ளூர் மாவட்டம், பெரும்பாக்கம் கிராமத்தில் 50 சென்ட் நிலப்பரப்பில், 10,600 சதுர அடி கட்டடப் பரப்பில் தரை மற்றும் முதல் தளத்துடன், 2 கோடியே 40 லட்சத்து 15 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலகம் முதல்வரால் இன்றையதினம் திறந்து வைக்கப்பட்டது. இவ்வளாகத்தில், தொழிலாளர் உதவி ஆணையர் (சமூக பாதுகாப்பு திட்டம்), தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம் அலுவலகங்கள் மற்றும் அதன் சார்நிலை அலுவலகங்களான தொழிலாளர் துணை ஆய்வாளர், தொழிலாளர் உதவி ஆய்வாளர், முத்திரை ஆய்வாளர் அலுவலகங்கள் ஆகியவை அமையப் பெற்றுள்ளன. இதன்மூலம், பொதுமக்கள், தொழிலாளர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் தங்களுடைய கோரிக்கைகள் மற்றும் விண்ணப்பங்களை அளிக்கவும், 18 உடலுழைப்பு தொழிலாளர்கள் நலவாரியங்களில் பதிவு செய்துள்ள தொழிலாளர்கள் தங்களுடைய பதிவை புதுப்பிக்கவும், புதிதாக பதிவு செய்யவும், பணப்பயன்களைப் பெறவும் ஏதுவாக இருக்கும்.

# உலகளவில் திரெட்ஸ் ஆப்
# 40 மில்லியன் பேர் பதிவிறக்கம் செய்து சாதனை

புது தில்லி, ஜூலை 10

மெட்டா நிறுவன தலைமை செயல் அதிகாரி மார்க் ஜுக்கர்பர்க் டுவிட்டருக்கு போட்டியாக திரெட்ஸ் என்ற பெயரில் புதிய சமூக வலைத்தளத்தை அறிமுகம் செய்திருக்கிறார். தோற்றத்திலும், பயன்பாடு விசயத்திலும் டுவிட்டர் போன்றே உருவாகி இருக்கும் திரெட்ஸ் சேவையை மெட்டா நிறுவனம் இன்ஸ்டாகிராமின் டெக்ஸ்ட் சார்ந்த உரையாடல் செயலி என்று தெரிவித்து இருக்கிறது.

திரெட்ஸ் அறிமுகம் செய்யப்பட்ட 7 மணி நேரத்தில் அதில் சுமார் ஒரு கோடி பேர் இணைந்தது பெரிய சாதனையாக பார்க்கப்படுகிறது. இந்நிலையில், புகழ்பெற்ற அளவீட்டு நிறுவனமான சென்சார் டவர் திரெட்ஸ் ஆப் பதிவிறக்கம் தொடர்பாக தரவுகளை வெளியிட்டது. இதில், திரெட்ஸ் ஆப் அறிமுகம் செய்யப்பட்ட நாளில் உலகம் முழுவதும் சுமார் 40 மில்லியன் பதிவிறக்கங்கள் செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவித்துள்ளது. இந்த எண்ணிக்கை கடந்த சதாப்தத்தில் முன்னர் பதிவு செய்யப்பட்ட ஏவுகணைகளை விட உயர்ந்த ஒரு புதிய தரநிலையை எட்டியுள்ளது.

சர்வதேச அளவில் இந்தப் பதிவிறக்கங்களின் விநியோகம் இந்தியா மற்றும் பிரேசிலில் ஆதிக்கம் செலுத்தி, ஒட்டுமொத்த பதிவிறக்கங்களில் முறையே 22% மற்றும் 16% ஆகியவற்றைக் கைப்பற்றியது. மறுபுறம், யுனைடெட் ஸ்டேட்ஸ் ஒரு தனித்துவமான பகுதியைக் கொண்டு, சுமார் 5.5 மில்லியன் பதிவிறக்கங்களைக் குவித்தது. போக்கிமான் கோ மற்றும் கால் ஆப் டியூட்டி மொபைல் போன்ற குறிப்பிடத்தக்க கேம்களின் அறிமுக நாளில் பதிவிறக்கத்தின் எண்ணிக்கையை திரெட்ஸ் ஆப் விஞ்சியுள்ளது.



# டிரெய்ன்மேன் நிறுவனத்தில் அதானி எண்டர்பிரைசஸ் முதலீடு

புது தில்லி, ஜூலை 10

டிரெய்ன்மேன் நிறுவனத்தில் அதானி எண்டர்பிரைசஸ் முதலீடு செய்யவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. இது குறித்து விரிவான செய்தியாவது: அதானி எண்டர்பிரைசஸ், ஆன்லைன் ரயில் டிக்கெட் முன்பதிவு தளமான டிரெய்ன்மேன் நிறுவனத்தின், துணை நிறுவனமான ஸ்டார்ட் எண்டர்பிரைசஸ்சின், 30 சத பங்குகளை, ரூ.3.56 கோடி ரூபாய்க்கு வாங்கியுள்ளது. டிரெய்ன்மேன் கடந்த 2011ல் துவக்கப்பட்ட இந்திய ரயில் பயண முன்பதிவு செயலியாகும். இது, ரயில் பயண டிக்கெட்டுகளின் பிஎன்ஆர் நிலையை சரிபார்க்க உதவுகிறது. காத்திருப்பு பட்டியலில் உறுதிப்படுத்தப்பட்ட இருக்கையை பெறுவதற்கான வழிகளை தெரிவிப்பதுடன், வழங்கவும் செய்கிறது. மேலும், ரயில்களின் இருக்கை நிலை, இயங்கும் நிலை, நேர அட்டவணை, கட்டண விகிதங்கள் போன்றவற்றின் நிகழ்நேர அறிவிப்புகளை இந்த செயலி வழங்குகிறது.



## சந்திராயன் 3 மூலம்

# நிலவின் மேற்பரப்பில் விண்கலத்தை தரையிறக்கிய 4வது நாடு என்ற பெருமையை இந்தியா பெறும்: அமைச்சர்

புது தில்லி, ஜுலை 10

இந்த வாரத்தில் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து விண்ணில் செலுத்தப்பட உள்ள சந்திரயான்-3 விண்கலத்தின் மூலமாக, நிலவின் மேற்பரப்பில் விண்கலத்தை தரையிறக்கும் நான்காவது நாடு என்ற பெருமையை இந்தியா பெறும் என மத்திய விண்வெளித்துறை இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்துள்ளதாவது: பிரதமர் மோடியின் ஆட்சியில் நமது விண்வெளி நிபுணத்துவம் பெரிய அளவில் உயர்ந்துள்ளதாக அமைச்சர் கூறினார். சந்திரயான்-3 என்பது சந்திரயான் -2 விண்கலத்தின் தொடர்ச்சி என்று அவர் குறிப்பிட்டார். நிலவின் மேற்பரப்பில் மென்மையான தரையிறக்கத்தில் இந்தியாவின் திறனை நிரூபிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது என்று ஜிதேந்திர சிங் கூறினார். நிலவின் சுற்றுவட்டப் பாதையில் விண்கலம் நுழைவதற்குத் தேவையான சிக்கலான அம்சங்கள் இதில் துல்லியமாக செயல்படுத்தப்பட்டுள்ளது என்று அவர் கூறினார். நிலவின் மேற்பரப்பில் சந்திரயான் -3 வெற்றிகரமாக தரையிறங்கிய பிறகு, ஆறு சக்கரங்களைக் கொண்ட ரோவர் வெளியே வந்து சந்திரனில் அது பணி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் ரோவரில் உள்ள பல கேமராக்களின் உதவியுடன், படங்களைப் பெற முடியும் என்றும் அவர் கூறினார்.

நிலவின் மேற்பரப்பில் பாதுகாப்பான மற்றும் மென்மையான தரையிறக்கத்தை நிரூபிப்பது, சந்திரனில் ரோவர் சுழல்வதை உறுதி செய்தல் மற்றும் அறிவியல் சோதனைகளை நடத்துவது ஆகியவை சந்திரயான்-3 விண்கலத் திட்டத்தின் முதன்மையான மூன்று நோக்கங்கள் ஆகும் என ஜிதேந்திர சிங் குறிப்பிட்டார்.

சந்திரயான் -1 விண்கலம் நிலவின் மேற்பரப்பில் நீர் இருப்ப தைக் கண்டறிந்த பெருமைக்குரியது என்று அவர் தெரிவித்தார். அமெரிக்காவின் நாசா போன்ற மிக முன்னணி விண்வெளி நிறுவனங்கள்கூட இந்த கண்டுபிடிப்பால் ஈர்க்கப்பட்டதை அமைச்சர் நினைவு கூர்ந்தார். சந்திரயான்-3 விண்கலம் இஸ்ரோ உருவாக்கிய மார்க்-3 செலுத்து வாகனம் மூலம் விண்ணில் செலுத்தப்படும் என்று அவர் கூறினார். சந்திரயான்-2 வெற்றி அடையவில்லை என்பதை சுட்டிக்காட்டிய அமைச்சர், அதைக் கருத்தில் கொண்டு சந்திரயான்-3 லேண்டரின் வலிமையை அதிகரிக்க சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளது என்று கூறினார்.

# நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு 59,505 கோடி டாலராக அதிகரிப்பு: ஆர்பிஐ தகவல்



மும்பை, ஜுலை 10

கடந்த ஜூன் 30ம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு 59,505.1 கோடி டாலராக அதிகரித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. இது குறித்து ஆர்பிஐ புள்ளிவிவரங்கள் தெரிவிப்பதாவது:

கடந்த மாதம் 30ம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு 185.3 கோடி டாலர்கள் அதிகரித்து 59,505.1 கோடி டாலராக உள்ளது. ஜூன் 23ம் தேதியுடன் நிறைவடைந்த முந்தைய வாரத்தில் அது 290.1 கோடி டாலர் குறைந்து 59,319.8 கோடி டாலராக இருந்தது.அக்டோபர் 2021ல் நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு 64,500 கோடி டாலரை எட்டியது. மேலும், உலகளாவிய பொருளாதார சூழல்களால் ஏற்படும் அழுத்தங்களுக்கு இடையே ரூபாய் மதிப்பைப் பாதுகாப்பதற்காக அந்நியச் செலாவணி கையிருப்பை ஆர்பிஐ பயன்படுத்துவதால் அது குறைந்து வந்தது.

ஜூன் 30ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் அந்நியச் செலா வணி கையிருப்பின் முக்கிய அங்கமான அந்நிய நாணய சொத் துகள் 253.9 கோடி டாலர் அதிகரித்து 52,797.9 கோடி டாலராக உள்ளது. டாலர் அல்லாத யூரோ, பவுண்ட், யென் போன்ற பிற செலாவணிகளின் கையிருப்பில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள் டாலர் மதிப்பில் கணக்கிடப்படுவது அந்நிய நாணய சொத்துகள் ஆகும். மதிப்பீட்டு வாரத்தில் நாட்டின் தங்கம் கையிருப்பு 47.2 கோடி டாலர் குறைந்து 4,383.2 கோடி டாலராக உள்ளது.சிறப்பு வரைதல் உரிமைகள் 9.5 கோடி டாலர் சரிந்து 1,823.9 கோடி டாலராக உள்ளது.சர்வதேச நிதியத்தில் நாட்டின் கையிருப்பு 11.8 கோடி டாலர் குறைந்து 500.2 கோடி டாலராக உள்ளது என்று ஆர்பிஐயின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

# ரயில்களில் ஏசி இருக்கைக்கான கட்டணம் குறைப்பு

புது தில்லி, ஜூலை 10

வந்தே பாரத் உட்பட அனைத்து ரயில்களிலும் ஏசி இருக்கை வகுப்பு மற்றும் எக்ஸிகியூட்டிவ் வகுப்புகளுக்கான கட்டணத்தை 25 சதம் குறைப்பதாக மத்திய ரயில்வே துறை அறிவித்துள்ளது.

இது குறித்து விரிவான செய்தியாவது:

ரயில்களில் ஏசி இருக்கை வகுப்பு என்று ஒரு பிரிவுஉள்ளது. சில குறிப்பிட்ட வழித்தடங்களில், ஏசி இருக்கை வகுப்புகளை மக்கள் பயன்படுத்துவது குறைவாக உள்ளது. இந்நிலையில், அப் பெட்டிகளில் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கில் கட்டணத்தை 25 சதம் வரையில் குறைக்க ரயில்வே துறை முடிவு செய்துள்ளது. இந்தச் சலுகைதிட்டம் வந்தே பாரத் ரயில்களுக்கும் பொருந்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. முற்றிலும் ஏசி பெட்டிகளைக் கொண்டிருக்கும் வந்தேபாரத் மற்ற ரயில்களை விட வேகமாக செல்லக்கூடியது. மற்ற ரயில்களைவிடவும் வந்தே பாரத்தில் கட்டணம் அதிகம். இதனால், சில வழித்தடங்களில் 21 சதம் முதல் 50 சதம் வரையில் மட்டுமே மக்கள் வந்தே பாரத் ரயிலைப் பயன்படுத்துகின்றனர். இந்நிலையில், அத்தகைய வழித்தடங்களில் செல்லும் வந்தே பாரத் ரயில்களின் கட்டணமும் 25 சதவீதம் உடனடியாக குறைக்கப்படுகிறது.

இது குறித்து ரயில்வே வாரியம்வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: ஏசிஇருக்கை பெட்டிகள், எக்ஸிகியூட்டிவ் வகுப்புகள் உள்ள அனைத்து ரயில்களுக்கும் சலுகைக் கட்டண அறிவிப்பு பொருந்தும். கடந்த 30 நாட்களில் ஏசி இருக்கை மற்றும் எக்ஸிகியூட்டிவ் வகுப்புகளில் 50 சதவீதத்துக்கும் குறைவான பயணிகள் பயணித்த ரயில்களுக்கு இந்தச் சலுகைக் கட்டணம் நடைமுறைப்படுத்தப்படும். டிக்கெட்டின் அடிப்படைக் கட்டணத்தில் 25 சதம் வரையில் சலுகை வழங்கப்படும். டிக்கெட்டை பதிவு செய்வதற்கான கட்டணம், ஜிஎஸ்டிஉள்ளிட்டவை இந்தச் சலுகையில் சேர்க்கப்படாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ரயில்வே மண்டலங்கள், தங்கள் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் எந்த ரயில்களில் ஏசி இருக்கை மற்றும் எக்ஸிகியூட்டிவ் வகுப்புகளில் குறைவான பயணிகள் பயணிக்கின்றனர் என்பதை கணக்கிட்டு, அந்த வழித்தடங்களில் சலுகைக் கட்டணத்தை அறிமுகப்படுத்தும். ஏற்கெனவே முன்பதிவு செய்தவர்கள், தற்சமயம் தங்களது கட்டணத்தில் சலுகை கோர முடியாது. விடுமுறை மற்றும் பண்டிகை நாட்களில் அறிமுகப்படுத்தப்படும் சிறப்பு ரயில்களுக்கு இந்தச் சலுகை திட்டம் பொருந்தாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜேசிபி நிறுவனம் புதிய ஸ்மார்ட்போன் உருவாக்கம்

மும்பை, ஜூலை 10

ஜேசிபி நிறுவனத்தை குறித்து யாருக்கும் சொல்லி தெரியப்படுத்த வேண்டிய அவசியமில்லை. இந்த நிறுவனம் கனரக வாகனங்களுக்கு உதிரி பாகங்கள் தயாரிப்பதில் உலகளவில் முன்னணியில் இருக்கிறது. இந்த நிறுவனத்தில் இருந்து எந்த பொருள் உருவாக்கப்பட்டாலும், அது உச்சகட்ட தரம் வாய்ந்ததாக மட்டுமே இருக்கும். நீடித்து உழைக்கூடிய அம்சங்களும் அதில் கொடுக்கப்பட்டிருக்கும். இந்நிலையில் உச்சகட்ட அம்சங்களுடன் ஜேசிபி டஃப்போன் மேக்ஸ் மாடல் உருவாக்கப்பட்டுள்ளது.



இதன் சிறப்பம்சங்களாவது: இந்த போன் ஒரு 5ஜி மாடலாகும். இந்த போனில் 6.7 இன்ச் ஃபுல்எச்டி பிளஸ் ஐபிஎஸ் எல்சிடி டிஸ்பிளே வருகிறது. இந்த போனின் பேக் கேமரா ஃபோர் லேயர் செட்டப் கொண்டுள்ளது. அந்த வகையில், 48 எம்பி மெயின் + 16 எம்பி அல்ட்ரா வைடு கேமரா + 2 எம்பி மேக்ரோ கேமரா + 0.3 எம்பி டெப்த் கேமரா வருகிறது. 20 எம்பி செல்பீ கேமரா கொடுக்கப்பட்டுள்ளது. ஆண்ட்ராய்டு 12 ஓஎஸ் உடன் மீடியாடெக் டைமன்சிட்டி சிப்செட் கொண்டிருக்கிறது.

இந்த போனில் 12,200 எம்ஏஎச் அளவில் மிகப்பெரும் பேட்டரி கொடுக்கப்பட்டுள்ளது. இந்த பேட்டரியில் ஒருமுறை ஃபுல் சார்ஜ் செய்தால், தொடர்ந்து 30 நாட்களுக்கு பேக்கப் கிடைக்கும். 8 ஜிபி ரேம் + 256 ஜிபி ஸ்டோரேஜ் கொடுக்கப்பட்டுள்ளது. டூயல் சிம் கார்டு போர்ட் வருகிறது.

ஐபி68 தர வாட்டர் மற்றும் டஸ்ட் ப்ரூப் கொடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, ராணுவ உபகரணங்களுக்கு வழங்கப்படும் மில் ஸ்பெக் 810ஜி தர சான்றிதழ் பெற்றுள்ளது. 1.8மீ ஆழத்தில் கடல், ஏரி, குளம், குட்டை என்று எதில் விழுந்தாலும், பல மணி நேரத்துக்கு தாக்குபிடிக்கும்.2 வருட வாரண்ட்டி கொடுக்கப்பட்டுள்ளது. டிஸ்பிளேவுக்கு கார்னிங் கொரில்லா கிளாஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த போனும் மெட்டல் பாடியில் உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. இந்த போனின் விலையை பொறுத்தவரையில், 600 யூரோவாக (இந்திய மதிப்பில் ரூ.62,530) நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த மாதத்தில் விற்பனைக்கு வருகிறது. முதலில் இங்கிலாந்தில் விற்பனைக்கு வரும். அடுத்த சில வாரங்களில் மற்ற நாடுகளில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# கலாநிதி மாறனுக்கு ரூ.380 கோடி வழங்க வேண்டும் பைஸ்ஜெட் நிறுவனத்துக்கு நீதிமன்றம் உத்தரவு

புது தில்லி, ஜூலை 10

சன் குழுமத்தின் தலைவர் கலாநிதி மாறனுக்கு வழங்க வேண்டிய ரூ.380 கோடி வட்டித் தொகையை முழுமையாக வழங்குமாறு ஸ்பைஸ்ஜெட்-க்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

இது குறித்து விரிவான செய்தியாவது: ஸ்பைஸ்ஜெட் நிறுவனம் கடும் நஷ்டத்தை சந்தித்த நிலையில், 2015-ம் ஆண்டு கலாநிதி மாறன் தன் வசமிருந்த ஸ்பைஸ் ஜெட் நிறுவனத்தின் அனைத்துப் பங்குகளையும், அந்நிறுவனத்தின் தற்போதைய தலைவர் அஜய் சிங்கிடம் விற்றார். அந்த சமயத்தில், நிறுவனத்தின் நடைமுறை செலவுகள், கடன் தவணை செலுத்துதல் உள்ளிட்டவற்றில் கலாநிதி மாறன் பங்களிப்பு வழங்கி இருந்தார். இதற்கான தொகையாக ரூ.679 கோடியை ஸ்பைஸ்ஜெட் நிறுவனம் தனக்குதர வேண்டும் என்று கலாநிதி மாறன் டெல்லி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். இதையடுத்து ஸ்பைஸ்ஜெட் நிறுவனம் கலாநிதி மாறனுக்கு ரூ.580 கோடி அசல் தொகையை வழங்கியது. ஆனால், வட்டியை வழங்கவில்லை.

இந்நிலையில் வட்டித் தொகையில் ரூ.75 கோடியை மூன்று மாதங்களுக்குள் செலுத்துமாறு உச்ச நீதிமன்றம் கடந்த பிப்ரவரி மாதம் ஸ்பைஸ்ஜெட் நிறுவனத்துக்கு உத்தரவிட்டது. ஆனால் கூடுதல் கால அவகாசம் வேண்டும் என்று ஸ்பைஸ்ஜெட் நிறுவனம் கோரிக்கை விடுத்தது. இந்நிலையில் ஸ்பைஸ்ஜெட் நிறுவனத்தின் கோரிக்கையை ஏற்க மறுத்த உச்ச நீதிமன்றம், கலாநிதி மாறனுக்கு வழங்கப்பட வேண்டிய ரூ.380 கோடி வட்டித் தொகையை வழங்குமாறு உத்தரவிட்டுள்ளது.



# ரூ.668 கோடி ஈவுத் தொகை அரசுக்கு வழங்கியது பிஓஐ

மும்பை, ஜூலை 10

2022-23ம் நிதியாண்டுக்கான பங்கு ஈவுத் தொகையாக மத்திய அரசுக்கு ரூ.668.17 கோடி ரூபாயை பொதுத் துறையைச் சேர்ந்த பேங்க் ஆஃப் இந்தியா (பிஓஐ) வழங்கியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. இது குறித்து பாங்க் ஆஃப் இந்தியா வங்கி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: கடந்த ஆண்டு ஏப்ரல் முதல் இந்த ஆண்டு மார்ச் வரையிலான நிதியாண்டுக்கான பங்கு ஈவுத் தொகையாக, ரூ.66.17 கோடியை மத்திய அரசுக்கு வங்கி அளித்துள்ளது.

அண்மையில் தில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் அதற்கான காசோலையை மத்திய நிதியமைச்சர் நிர்லா சீதாராமனிடம் வங்கியின் நிர்வாக இயக்குநர் ரஜனீஷ் கர்நாடக் வழங்கினார் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக, கடந்த நிதியாண்டுக்கான ஈவுத் தொகையாக பங்கு ஒன்றுக்கு 2 சதவீதம் (20 சதவீதம்) வழங்கப்படும் என்று பேங்க் ஆஃப் இந்தியா அறிவித்தது.



### பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில்களில்

# திருப்பணிகளை மேற்கொள்ள ரூ.50 கோடிக்கான வரைவோலை: முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்




சென்னை, ஜுலை 10

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை தலைமைச் செயலகத்தில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில், 2022 - 2023 ஆம் ஆண்டிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள 1,250 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக் கோயில்கள் மற்றும் 1,250 கிராமப்புறத் திருக்கோயில்களில் திருப்பணிகளை மேற்கொள்ள 2 லட்சம் ரூபாய் வீதம் 50 கோடி ரூபாய் வழங்கிடும் அடையாளமாக 20 திருக்கோயில்களின் நிர்வாகிகள் மற்றும் பூசாரிகளிடம் திருக்கோயில் திருப்பணிகள் மேற்கொள்ள வரைவோலைகளை வழங்கினார்.

இந்து சமய அறநிலையத்துறை தனது கட்டுப்பாட்டிலுள்ள தொன்மை வாய்ந்த திருக்கோயில்களை பழமைமாறாமல் புனர மைத்து குடமுழுக்கு நடத்துதல், திருக்குளத் திருப்பணி, திருத்தேர் திருப்பணி மற்றும் பக்தர்களுக்குத் தேவையானஅடிப்படை வசதி களை மேம்படுத்துதல், திருக்கோயிலுக்கு சொந்தமான சொத்துக் களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்தல் போன்ற பல் வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறது. மேலும் சட்டமன்றத்தில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளையும் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

2021-2022ம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத் துறையின் மானியக் கோரிக்கையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் அமைந்துள்ள 1,000 திருக்கோயில்களின் திருப்பணிக்காக எற்கனவே தலா 1 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு முதல் 1,250 திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள் மேற்கொள்ள தலா 2 லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

இதற்காக 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் எனவும், கிராமப்புறத் திருக்கோயில் திருப்பணித் திட்டத்தின்படி கிராம பகுதிகளில் அமைந்துள்ள 1,000 திருக்கோயில்களின் திருப்பணிக்காக எற்கனவே தலா 1 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு முதல் 1,250 திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள் மேற்கொள்ள தலா 2 லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதற்காக ரூபாய் 25 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில், முதல்வர் கடந்த 5.1.2023 அன்று சென்னை, வில்லிவாக்கத்தில் 1,250 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில்கள் மற்றும் 1,250 கிராமப்புறத் திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ள ரூ.2 லட்சம் வீதம் ரூ.50 கோடிக்கான வரைவோலைகளை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, 2022 – 2023 ஆம் ஆண்டிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள 1250 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில்கள் மற்றும் 1,250 கிராமப்புறத் திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ள 2 இலட்சம் ரூபாய் வீதம் 50 கோடி ரூபாய்க்கான வரைவோலை களை தமிழ்நாடு முதல்வர் அந்தந்த திருக்கோயில்களின் நிர்வாகிகள் மற்றும் பூசாரிகளிடம் வழங்கினார்.

இதன்மூலம் அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்கள் மட்டுமின்றி, கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில்களிலும் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு புதுப்பொலிவு பெற்றிடும்.

இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, சுற்றுலா. பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர் அ.சங்கர், ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இந்தியாவுக்கான ரஷிய கச்சா எண்ணெய் விலை உயர்வு

புது தில்லி, ஜுலை 10

இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் ரஷிய கச்சா எண்ணெயின் தள்ளுபடி குறைக்கப்பட்டுள்ளதால், அதன் விலை அதிகரித்துள்ளது.

இது குறித்து விரிவான செய்தியாவது: உக்ரைன்-ரஷியா போருக்கு முன் ரஷியாவிடமிருந்து 2 சதத்துக்கும் குறைவாக கச்சா எண்ணெயைக் கொள்முதல் செய்த இந்தியா, தற்போது தனது தேவையில் 44 சதத்தை ரஷியாவிடம் இருந்தே கொள்முதல் செய்கிறது. கடந்த ஆண்டு மத்தியில் ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய்க்கு சுமார் 30 டாலர் வரை ரஷிய நிறுவனங்கள் தள்ளுபடி வழங்கின. ஆனால், தற்போது அந்தத் தள்ளுபடியானது 4 டாலராகக் குறைந்துள்ளது. அதே நேரத்தில், ரஷியாவில் இருந்து கச்சா எண்ணெயை ஏற்றி வருவதற்கான கட்டணம், மற்ற நாடுகள் விதிக்கும் கட்டணத்தைவிட சுமார் 3 மடங்கு வரை அதிகமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கச்சா எண்ணெயை ஏற்றி வர பீப்பாய்க்கு 11 முதல் 19 டாலர் வரையிலான கட்டணத்தை ரஷிய எண்ணெய் நிறுவனங்கள் விதிப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இது சராசரி கட்டணத்தைவிட 3 மடங்கு அதிகம்.

அவற்றின் காரணமாக, இந்தியா கொள்முதல் செய்யும் ரஷிய கச்சா எண்ணெயின் விலை கணிசமாக அதிகரித்துள்ளது. தற்போதைய நிலையில், இந்தியன் ஆயில், பாரத் பெட்ரோலியம், மங்களூரு சுத்திகரிப்பு நிறுவனம், ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் ஆகிய பொதுத் துறை நிறுவனங்களும், ரிலையன்ஸ், நயாரா உள்ளிட்ட தனியார் நிறுவனங்களும் தனித்தனியாகவே ரஷிய நிறுவனங்களுடன் தள்ளுபடி தொடர்பான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றன.

அதன் காரணமாகவே கச்சா எண்ணெய்க்கான தள்ளுபடி பெருமளவில் குறைந்துவிட்டதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். அந்த நிறுவனங்கள் அனைத்தும் ஒருங்கிணைந்து தள்ளுபடி தொடர்பான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டால், கச்சா எண்ணெய் கூடுதல் தள்ளுபடி விலையில் கிடைக்க வாய்ப்புள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். மேற்கத்திய நாடுகள் தற்போது வரை ரஷியாவிடமிருந்து கச்சா எண்ணெயைக் கொள்முதல் செய்யாமல் உள்ளன. சீனாவின் கச்சா எண்ணெய் தேவை தொடர்ந்து குறைந்து வருகிறது. அதன் காரணமாக, உற்பத்தி செய்யப்படும் கச்சா எண்ணெயை இந்தியாவுக்கு விற்பனை செய்வதைத் தவிர ரஷியாவுக்கும் வேறு வழியில்லை. அதைக் கருத்தில்கொண்டு, கச்சா எண்ணெய் விலை தொடர்பான பேச்சுவார்த்தையில் அனைத்து நிறுவனங்களும் ஒருங்கிணைந்து பங்கேற்றால், கூடுதல் தள்ளுபடி விலைக்குக் கச்சா எண்ணெயைப் பெற முடியும் என்று நிபுணர்கள் தெரிவித்தனர்.

# எஸ்எஸ்எல்வி ராக்கெட்டை தனியாரிடம் ஒப்படைக்க இஸ்ரோ திட்டம்

ஸ்ரீஹரிகோட்டா, ஜூலை 10

எடை குறைந்த செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவுவதற்கான எஸ்எஸ்எல்வி ராக்கெட்டை முழுமையாகத் தனியாரிடம் ஒப்படைக்க இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ முடிவெடுத்துள்ள தாக தகவல்கள் வெளியாகியுள்ளது. இது குறித்து விரிவான செய்தியாவது: செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்துவதற்காக ராக்கெட்டுகள் தயாரிக்கப்படு கின்றன. இதுவரை இஸ்ரோ எஸ்எல்வி-3, ஏஎஸ்எல்வி, பிஎஸ் எல்வி, ஜிஎஸ்எல்வி, எல்விஎம்-3, எஸ்எஸ்எல்வி ஆகிய 6 வகை ராக்கெட்டுகளை உருவாக்கியுள்ளது. அதில் எஸ்எல்வி-3, ஏஎஸ் எல்வி ஆகியவற்றுக்கு ஏற்கெனவே ஓய்வு அளிக்கப்பட்டுவிட்டது. மற்ற ராக்கெட்டுகள் வெற்றிகரமாக இயங்கி வருகின்றன. முக்கியமாக, பிஎஸ்எல்வி ராக்கெட் மூலமாக மட்டும் 54 முறை பல்வேறு செயற்கைக்கோள்கள் விண்ணில் செலுத்தப்பட்டுள்ளன.

எஸ்எஸ்எல்வி ராக்கெட்டை இஸ்ரோ அண்மையில் உருவாக் கியது. 500 கிலோவுக்கும் குறைவான எடை கொண்ட செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்துவதற்கு வசதியாக அந்த வகை ராக்கெட் உருவாக்கப்பட்டது. முதல் எஸ்எஸ்எல்வி ராக்கெட் கடந்த ஆண்டு ஆகஸ்டில் விண்ணில் செலுத்தப்பட்டது. ஆனால், அதில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக செயற்கைக்கோள் களைத் திட்டமிட்ட சுற்றுவட்டப்பாதையில் நிலைநிறுத்த முடியாமல் போனது. அதையடுத்து, எஸ்எஸ்எல்வி ராக்கெட் கடந்த பிப்ரவரியில் மீண்டும் செலுத்தப்பட்டது. அப்போது, இஓஎஸ்-07 செயற்கைக் கோள், பள்ளி மாணவர்களால் உருவாக்கப்பட்ட ஆசாதிசாட்-2 செயற் கைக்கோள், அமெரிக்க நிறுவனத்தின் ஜானஸ்-1 செயற்கைக்கோள் ஆகியவற்றை எஸ்எஸ்எல்வி வெற்றிகரமாக நிலைநிறுத்தியது.

10 முதல் 100 கிலோ வரை எடை கொண்ட நானோ, மைக்ரோ அளவிலான செயற்கைக்கோள்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் நோக்கில் எஸ்எஸ்எல்வி செயல்பட்டு வருகிறது. இந்நிலையில், எஸ்எஸ்எல்வி ராக்கெட்டை முற்றிலும் தனியாரிடம் ஒப்படைக்க இஸ்ரோ முடிவெடுத்துள்ளது. எஸ்எஸ்எல்வி ராக்கெட்டின் தயாரிப்பு மட்டுமல்லாமல், அதன் செயல்பாடு உள்ளிட்டவற்றை நிர்வகிக்கும் பொறுப்பையும் தனியாரிடம் வழங்கவுள்ளதாக இஸ்ரோ உயரதிகாரி தெரிவித்தார்.

ஏலத்தை நடத்தி தனியார் நிறுவனத்திடம் எஸ்எஸ்எல்வி ஒப்படைக் கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். சர்வதேச அளவில் விண் வெளி ஆராய்ச்சிகளில் இஸ்ரோ முன்னிலை வகித்து வருகிறது. ஆனால், இந்திய விண்வெளித்துறையில் இதுவரை இஸ்ரோவே அதிக ஆதிக்கம் செலுத்தி வருகிறது. விண்வெளித் துறையில் தனியார் துறையின் பங்களிப்பை அதிகரிப்பதற்கான நடவடிக்கை களை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது. அதன் காரணமாக, விண்வெளி ஆராய்ச்சி சார்ந்த 100க்கும் அதிகமான புத்தொழில் நிறுவனங்கள் நாட்டில் செயல்பட்டு வருகின்றன. தற்போது தனியார் பங்களிப்பை மேலும் அதிகரிக்கும் நோக்கில் எஸ்எஸ்எல்வி ராக்கெட்டை தனியாரிடம் இஸ்ரோ ஒப்படைக்கவுள்ளது.

# பிஎஸ்என்எல் நிறுவன சொத்துகள் ஏலம் ஆக.17-க்குள் விண்ணப்பிக்கலாம்

சென்னை, ஜூலை 10

மின்னணு முறையில் ஏலமிடப்படவுள்ள பிஎஸ்என்எல் நிலம் மற்றும் கட்டட சொத்துகளை வாங்க விரும்புபவர்கள் ஆக.17ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என பிஎஸ்என்எல் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து பிஎஸ்என்எல் நிர்வாகம் சார்பில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: பிஎஸ்என்எல் நிர்வாகம் தமிழகம் மற்றும் புதுச்சேரியின் ஐந்து பகுதிகளிலுள்ள நிலம் மற்றும் கட்டட சொத்துகளை மின் ஏலம் மூலம் விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளது.

இதன்படி, சென்னை அண்ணா சாலையில் உள்ள 4,047 ச.மீ. பரப்பிலான டின்ரோஸ் தொலைபேசி தொடர்பகம், உடுமலைப்பேட் டையில் உள்ள 4,267 ச.மீ. பரப்பிலான தொலைபேசி தொடர்பகம் மற்றும் எஸ்கியூ வளாகம், கோவை மேட்டுப்பாளையத்தில் உள்ள 2,929 ச.மீ. பரப்பிலான மைக்ரோவேவ் கட்டட வளாகம், விழுப் புரத்தில் உள்ள 2,396 ச.மீ. பரப்பிலான டி.டி.ஓ. வளாகம், புதுச் சேரியில் உள்ள 2,237 ச.மீ. பரப்பிலான நிலம் மற்றும் கட்டடங்கள் விற்பனைக்கான ஏலத்தை அந்நிறுவனம் தொடங்கியுள்ளது.

இதை ஏலம் எடுக்க விரும்பும் ஆர்வமுள்ள ஏலதாரர்கள் எம்எஸ்டிசி-இன் இணைய தளத்திலும், ஆர்.எஃப்.பி. மற்றும் பிற ஆவணங்கள் குறித்த தகவல்களை பிஎஸ்என்எல்-இன் இணைய தளத்திலும் தெரிந்து கொள்ளலாம். ஆன்லைன் ஏலத்துக்கான விண்ணப்பத்தை ஆக.17ம் தேதி பிற்பகல் 3 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண இலங்கைக்கு மத்திய அரசு உறுதி

கொழும்பு, ஜூலை 10

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு, இலங்கைக்கு இந்தியா தொடர்ந்து ஆக்கப்பூர்வமான உதவிகளை செய்யும் என, மத்திய அரசு தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

இது குறித்து விரிவான செய்தியாவது: நம் அண்டை நாடான இலங்கை, அன்னியச் செலாவணி கையிருப்பு குறைந்ததால் கடந்தாண்டு கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியது. இந்த பிரச்னையில் இருந்து மீள்வதற்காக, முதல் நாடாக இந்தியா உதவிகளை அளிக்க முன்வந்தது. இதன்படி, ரூ.33,000 கோடி அளவுக்கு இலங்கைக்கு கடன் உதவிகள் அளிக்கப்பட்டன. பொருளாதார சிக்கலில் இருந்து மீள்வதற்காக, ஐஎம்எப் எனப்படும் சர்வதேச நிதியத்தின் உதவியை இலங்கை நாடியுள்ளது.

இதற்கு இலங்கைக்கு, இந்தியா உட்பட, 17 நாடுகள் உதவுவதாக அறிவித்து உள்ளன. இந்நிலையில், இலங்கையில் நடந்த கட்டு மானம், மின்சார கண்காட்சியை துவக்கி வைத்து, இலங்கைக்கான இந்திய துணைத் தூதர் வினோத் ஜேக்கப் தெரிவித்துள்ளதாவது: இந்தியா – இலங்கை இடையேயான உறவு கடந்த சில ஆண்டு களில் மிகவும் சிறப்பான பாதையில் செல்கிறது. அண்டை நாடுக ளுடன் நல்லுறவு என்ற அடிப்படையில் பொருளாதார சிக்கலில் சிக்கிய இலங்கைக்கு, முதல் நாடாக இந்தியா உதவிகளை அறி வித்தது. இந்த பொருளாதார சிக்கலில் இருந்து இலங்கை மீள்வ தற்கு, தேவையான அனைத்து ஆக்கப்பூர்வமான உதவிகளை இந்தியா தொடர்ந்து செய்யும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.



# 73 சத இந்திய குடும்பங்கள் கடன் இல்லாமல் உள்ளனர்: பிரைஸ் அமைப்பு ஆய்வுத் தகவல்

மும்பை, ஜூலை 10

பெரும்பாலான இந்திய குடும்பங்கள் வங்கி சாதனங்களில் முதலீடு செய்வதும், ஏழை குடும்பங்களில் கூட, 40 சதத்திற்கும் மேலாக வங்கி சாதனங்களில் முதலீடு செய்து வருவதும், ஆய்வில் தெரிய வந்துள்ளது. இந்திய நுகர்வோர் பொருளாதாரத்திற்கான மக்கள் ஆய்வு எனும் பிரைஸ் அமைப்பு, நாட்டின் 25 மாநிலங்களில் உள்ள, 40,000 குடும்பங்களிடம் ஆய்வு நடத்தியது. இந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: இந்த ஆய்வில், 69 சத குடும்பங்கள் வங்கி சாதனங்களில் முதலீடு செய்வதாக தெரிய வந்துள்ளது. அடுத்த நிலையில் காப்பீடு அமைகிறது. தங்கம் மற்றும் தங்கம் சார்ந்த பொருட்களிலும் கணிசமான இந்திய குடும்பங்கள் முதலீடு செய்கின்றன. அஞ்சலகங்களில் முதலீடு செய்பவர்கள் இந்த ஆய்வில், 4 சதமாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியர்களில் பெரும்பாலானோர், அவசர காலம் மற்றும் உயர்கல்விக்காக சேமிக்கின்றனர். பெரும்பாலும் வசதி படைத்தவர்களே பங்குகளில் அதிகம் முதலீடு செய்கின்றனர். மேலும், 73 சதவீத இந்திய குடும்பங்கள் கடன் இல்லாமல் இருப்பதாகவும் இந்த ஆய்வு தெரிவிக்கிறது.



## நாட்டில் கடந்த ஜூன் மாதத்தில்

# உள்நாட்டு வாகன விற்பனை 10 சதம் வளர்ச்சி



புது தில்லி, ஜூலை 10

கடந்த ஜூன் மாதத்தில் இந்தியாவின் உள்நாட்டு சந்தையில் வாகனங்களின் சில்லறை விற்பனை 10 சதம் வளர்ச்சி கண்டுள்ளது என வாகன விற்பனையாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு (ஃபடா) வெளியிட்டுள்ள புள்ளி விவரங்கள் தெரிவிப்பதாவது: கடந்த ஜூன் மாதத்தில் அனைத்துப் பிரிவுகளைச் சேர்ந்த வாகனங்களும் விற்பனை வளர்ச்சியைக் கண்டன. இதன் விளைவாக, அந்த மாதத்தில் வாகனங்களின் உள்நாட்டு சில்லறை விற்பனை 18,63,868-ஆக இருந்தது. 2022ம் ஆண்டின் இதே மாதத்தில் இந்த எண்ணிக்கை 17,01,105-ஆக இருந்தது. அதனுடன் ஒப்பிடுகையில் கடந்த ஜூன் மாதத்தில் வாகனங்களின் உள்நாட்டு சில்லறை விற்பனை 10 சதம் வளர்ச்சியடைந்துள்ளது. 2022, ஜூன் மாதத்தில் 2,81,811-ஆக இருந்த கார்களின் சில்லறை விற்பனை இந்த ஜூனில் 5 சதம் அதிகரித்து 2,95,299-ஆக இருந்தது.

அதே போல், இரு சக்கர வாகனங்களின் சில்லறை விற்பனையும் கடந்த ஜூன் மாதத்தில் 7 சதம் அதிகரித்து 13,10,186-ஆக இருந்தது. மேலும், இந்த எண்ணிக்கை கடந்த 2022-ஆம் ஆண்டின் இதே மாதத்தில் 12,27,149-ஆக இருந்தது. கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் 49,299-ஆக இருந்த மூன்று சக்கர வாகனங்களின் விற்பனை இந்த ஆண்டின் அதே மாதத்தில் 75 சதம் அதிகரித்து 86,511-ஆக இருந்தது.

2022, ஜூன் மாதத்தோடு ஒப்பிடுகையில், மதிப்பீட்டு மாதத்தில் டிராக்டர்களின் சில்லரை விற்பனை 45 சதம் அதிகரித்து 98,660-ஆக உள்ளது. அது போல், கடந்த ஆண்டின் ஜூன் மாதத்தில் 72,894-ஆக இருந்த வர்த்தக வாகனங்களின் விற்பனை இந்த ஆண்டின் அதே மாதத்தில் 73,212-ஆக அதிகரித்தது. 2022-ஆம் ஆண்டின் ஜூன் மாதத்தோடு ஒப்பிடுகையில் தற்போது வாகனங்களின் சில்லறை விற்பனை வளர்ச்சியைக் கண்டிருந்தாலும், கடந்த மே மாதத்தோடு ஒப்பிடுகையில் அது 8 சதம் சரிவைச் சந்தித்துள்ளது என்று அந்தப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

# ஜூன் காலாண்டில் நிலக்கரி உற்பத்தி 22.29 கோடி டன்னாக அதிகரிப்பு

புது தில்லி, ஜூலை 10

இந்தியாவின் நிலக்கரி உற்பத்தி கடந்த ஏப்ரல்-ஜூன் காலாண்டில் 22.29 கோடி டன்னாக உயர்ந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. இது குறித்து நிலக்கரித் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்கள் தெரிவிப்பதாவது:



கடந்த ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் நாட்டின் ஒட்டு மொத்த நிலக்கரி உற்பத்தி 22.29 கோடி டன்னாக உள்ளது.கடந்த நிதியாண்டின் இதே காலாண்டோடு ஒப்பிடுகையில் இது 8.40 சதம் அதிகமாகும். அப்போது நாட்டின் நிலக்கரி உற்பத்தி 20.56 கோடி டன்னாக இருந்தது குறிப்பிடத்தக்கது. மேலும், எரிசக்தி நிறுவனங்களுக்குச் சொந்தமான சுரங்கங்கள் மற்றும் பிற சுரங்கங்கள் 2022-23-ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் 2.91 கோடி டன் நிலக்கரி உற்பத்தி செய்திருந்தன. அது, நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் 4.74 சதவீதம் அதிகரித்து 30.48-ஆக உள்ளது. கடந்த ஜூன் 30ம் தேதி நிலவரப்படி, நாட்டின் நிலக்கரி கையிருப்பு 10.71 கோடி டன்னாக இருந்தது. 2022 ஜூன் 30ம் தேதி நிலக்கரி கையிருப்பான 7.79 கோடி டன்னுடன் ஒப்பிடுகையில் இது 37.62 சதவீதம் அதிகம் என்று அந்தப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

‘இந்த வளர்ச்சி நிலக்கரி தேவையை பூர்த்தி செய்வதற்கான தொடர்ச்சியான முயற்சிகளை குறிக்கிறது’ என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது. அரசுக்கு சொந்தமான கோல் இந்தியா லிமிடெட் (சிஐஎல்) 9.85 சத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. இது ஓராண்டுக்கு முன்பு இருந்த 159.63 மெட்ரிக் டன்னுடன் ஒப்பிடுகையில், நிகழ் நிதியாண்டின் முதல் காலாண்டில் 175.35 மெட்ரிக் டன்னை எட்டியுள்ளது. பருவமழைக் காலத்தில்கூட இந்தியா நடப்பாண்டு நிலக்கரி பற்றாக்குறையைச் சந்திக்காது என்று நிலக்கரி மற்றும் சுரங்கத் துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி கடந்த மாதம் தெரிவித்திருந்தார்.

# கார்ல் ஜெய்ஸ் இந்தியா பெங்களூரில் முதலீடு செய்கிறது




புது தில்லி, ஜூலை 10

இந்திய பொருளாதாரத்தை உற்பத்தி மற்றும் ஏற்றுமதியின் வாயிலாக அடுத்தக்கட்டத்திற்கு கொண்டு செல்ல மத்திய அரசு திட்டமிட்டு உள்ள வேளையில், இந்த வாய்ப்பை அனைத்து மாநிலங்களும் தீவிரமாக பயன்படுத்த முடிவு செய்துள்ளது. ஜெர்மனி நாட்டின் முன்னணி மூக்கு கண்ணாடிகளுக்கு பயன்படுத்தும் லென்ஸ் தயாரிப்பில் முன்னோடியான கார்ல் ஜெய்ஸ் இந்தியா, குறிப்பிடத்தக்க அளவிலான வர்த்தகத்தை கொண்டு இருக்கும் வேளையில் பெங்களூரில் புதிய முதலீட்டை செய்ய உள்ளது.

கார்ல் ஜெய்ஸ் புதிதாக கண்ணாடி லென்ஸ் தயாரிப்பு தளத்தை உருவாக்க சுமார் 250 மில்லியன் யூரோ அளவிலான தொகையை முதலீடு செய்ய உள்ளதாக அறிவித்துள்ளது. இதுதான் ஜெர்மனி நாட்டின் கார்ல் ஜெய்ஸ் நிறுவனத்தில் உலகளவில் பெரிய நிறுவனமாக இருக்கப்போகிறது. கார்ல் ஜெய்ஸ் நிறுவனத்தின் தொழிற்சாலை பெயர் விஷன் பேக்டரி எனவும் அழைக்கப்படுகிறது.

இந்த முதலீட்டின் மூலம் ஜெய்ஸ் குழுமத்தின் வளர்ச்சிக்கு இந்தியா முக்கிய பங்கு வகிக்கும் என்பதை காட்டியுள்ளது. இதை கார்ல் ஜெய்ஸ் நிர்வாக இயக்குனர் கோன்சாலஸ் டியாஸ் ஒரு முக்கிய பேட்டியிலும் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே இதற்கான நிலத்தை பெங்களூரில் கையகப்படுத்தப்பட்ட நிலையில் அடுத்த மாதம் இந்த மாபெரும் தொழிற்சாலையின் கட்டுமானப் பணிகள் தொடங்கும்.

பெங்களூரில் கட்டப்படும் புதிய தொழிற்சாலை 2024 அக்டோபர் மாதத்திற்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இந்த ஆண்டு கார்ல் ஜெய்ஸ் சுமார் 1,800 கோடி ரூபாய் அளவிலான விற்பனையை பதிவு செய்யும் என எதிர்பார்க்கிறது. இப்புதிய தொழிற்சாலை மூலம் அடுத்த ஆறு ஆண்டுகளுக்குள் இந்தியாவில் அதன் விற்பனையை இரட்டிப்பாக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பாக

# பிரசித்தி பெற்ற அம்மன் திருக்கோயில்களுக்கு ஆன்மீக சுற்றுலா வாய்ப்பு

மதுரை, ஜூலை 10

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் மற்றும் இந்துசமய அறநிலையத்துறையும் இணைந்து ஆன்மீக பயணிகள் பயன் பெறும்வகையில் சென்னை, மதுரை, திருச்சி, மற்றும் தஞ்சாவூர் ஆகிய நகரங்களில்உள்ள பிரசித்தி பெற்ற அம்மன் திருக்கோயில் களை தரிசனம் செய்யும் வகையில் காலை 8.30 மணிமுதல் இரவு 8.30 மணிவரை ஒருநாள்ஆடி அம்மன் தொகுப்பு சுற்றுலா 17.07.2023 அன்று முதல் அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பிரசித்தி பெற்ற அம்மன் திருக்கோயில்களுக்கு ஆடி மாதத்தில் ஒவ்வொரு செவ்வாய், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் அழைத்துச் சென்று சிறப்பு தரிசனம் செய்யும் வகையில் இந்த ஒரு நாள் சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

1.அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கோயில்

2.அருள்மிகு வண்டியூர் மாரியம்மன் தெப்பக்குளம் திருக்கோயில்

3.அருள்மிகு மடப்புரம் காளியம்மன் திருக்கோயில்

4.அருள்மிகு தாயமங்கலம் முத்து மாரியம்மன் திருக்கோயில்

5.அருள்மிகு வெட்டுடையார் காளியம்மன் திருக்கோயில்

6.அருள்மிகு ராக்காயி அம்மன்கோயில், அழகர்கோயில்

அனைத்து கோயில்களிலும் இந்துசமயஅறநிலையத்துறை, கோயில்நிர்வாக அதிகாரிகள் மற்றும் தமிழ்நாடு சுற்றுலாத் துறையும், இணைந்து பயணிகளை வரவேற்று சிறப்பு தரிசனத் திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் சிறப்பு பூஜை நடத்தப் பட்டு அனைத்து கோவில்களிலும் அம்மன் பிரசாதங்கள் வழங்கப்பட உள்ளது. இந்த ஆண்டு ஆடி மாதத்தை முன்னிட்டு ஒரு நாள் ஆடி அம்மன் ஆன்மீக சுற்றுலா செல்ல விரும்பும் பக்தர்கள் www.ttdconline.com இணையத்தின் மூலமாகவும், மற்றும் ஓட்டல் தமிழ்நாடு அழகர்கோவில் ரோடு, மதுரை–2–வில் நேரடியாக பதிவு செய்து கொள்ளலாம். மேலும், விவரங்களுக்கு ஓட்டல் தமிழ்நாடு, அழகர்கோவில் ரோடு, மதுரை – 6380699288, 9176995841 என்றதொலை பேசியில் தொடர்பு கொண்டு விவரங் களைத் தெரிந்து கொள்ளலாம் என மாவட்ட சுற்றுலா அலுவலக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதிய நாய்ஸ்பிட் டிவிஸ்ட் ப்ரோ மாடல் சந்தையில் அறிமுகம்

சென்னை, ஜூலை 10

நாய்ஸ் நிறுவனம் புதிதாக நாய்ஸ்பிட் பியூஸ் பிளஸ் என்ற ஸ்மார்ட்வாட்ச் சாதனத்தை சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, நாய்ஸ் அதன் சமீபத்திய ஸ்மார்ட்வாட்ச் சாதனமாக புது நாய்ஸ்பிட் டிவிஸ்ட் ப்ரோ மாடலை அறிமுகப்படுத்தியுள்ளது.

நாய்ஸ்பிட் டிவிஸ்ட் ப்ரோ ஆனது ஸ்டைலான லெதர் ஸ்ட்ராப் மற்றும் 1.4’ இன்ச் அளவு கொண்ட எச்டி அமோல்ட் டிஸ்ப்ளே ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இதன் வட்ட வடிவ டயல் நேர்த்தியான வடிவமைப்புடன் ஸ்டைலான லுக் உடனே வருகிறது. இது, புதிய ட்ரெண்டிங் ஸ்மார்ட் வாட்ச் அம்சமான வாட்ச் கிரௌன் பட்டன் உடன் வருகிறது. இதன் மூலம் ஸ்மார்ட்வாட்ச் இன் அம்சங்களை எளிதாக வழிசெலுத்தலை செயல்படுத்துகிறது.

இந்த புதிய ஸ்மார்ட்வாட்ச் ஆனது ட்ருசின்க் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைக்கிறது. இது சமீபத்திய புளூடுத் ஸ5.3 அம்சத்தை பயன்படுத்தி மேம்பட்ட அழைப்புக்கான சிங்கிள் சிப் பிடி அழைப்பு அம்சத்தை கொண்டுள்ளது. இந்த ஹெல்த் சுய்ட் அம்சத்தின் மூலம் ஸ்மார்ட்வாட்ச் பயனர்கள் அவர்களின், ஆரோக்கியத்தை கண் காணிக்க அனுமதிக்கிறது. இந்த ஸ்மார்ட்வாட்ச் பயனர்களின் இதயத் துடிப்பு, எஸ்பிஓ2 அளவு, ஸ்லீப் மானிட்டர், மன அழுத்த நிலை மற்றும் பிரீத் கண்ட்ரோல் போன்ற வியங்களை கண்காணிக் கிறது. மேலும், ஐபி68 வாட்டர் மற்றும் டஸ்ட் ரெசிஸ்டன்ஸ் அம்சத்துடன் வருகிறது. இந்த ஸ்மார்ட்வாட்ச் சாதனம் 100-க்கும் மேற்பட்ட வாட்ச் பேஸ் முகங்களுடன் வருகிறது. இந்த ஸ்மார்ட் வாட்ச் சாதனத்தின் விலை ரூ. 2,199 மட்டுமே.



# முத்ரா திட்டத்தில் கடனுதவி 23 சதம் உயர்வு




புது தில்லி, ஜுலை 10

பிரதமரின் முத்ரா கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன்கள், நடப்பாண்டின் முதல் காலாண்டில், 23 சதம் அதிகரித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

இது குறித்து விரிவான செய்தியாவது: முத்ரா கடன் திட்டம் என்பது, சிறு, குறு நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்குவதற்காக, கடந்த 2015ம் ஆண்டு மத்திய அரசால் துவக்கப்பட்ட திட்டமாகும். இத்திட்டத்தில் மூன்று வகையான கடன்கள் வழங்கப்படுகின்றன.

ரூ.50,000 வரையிலான கடன்கள் சிஷு எனவும், 50,000 முதல் 5 லட்சம் ரூபாய் வரையிலான கடன்கள் கிஷோர் என்றும், 5 லட்சம் முதல் 10 லட்சம் ரூபாய் வரையிலான கடன்கள் தருண் என்ற பெயரிலும் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன் தொகைகள், நடப்பாண்டில் 23 சதம் அதிகரித்து, முதல் காலாண்டில் ரூ.81,597 கோடியாக அதிகரித்துள்ளது. இது, முந்தைய ஆண்டின் இதே காலாண்டில் ரூ.62,650 கோடியாக இருந்தது.

மேலும், இத் திட்டம் துவங்கப்பட்டதிலிருந்து இதுவரை இல்லாத அளவிற்கு, முதல் காலாண்டில் அதிகமான தொகை, நடப்பு காலாண்டில் தான் வழங்கப்பட்டு உள்ளது. இதற்கு முன் சிஷு வகை கடன்களை பெற்றவர்கள், தருண் வகை கடன் தேவைகளுக்காக உந்தப்பட்டதால், இத்தகைய வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த நிதியாண்டில், முத்ரா திட்டத்தின் கீழ், ரூ.4.50 லட்சம் கோடி சிறு வணிக கடன்கள் வழங் கப்பட்டுள்ளன. முந்தைய நிதியாண்டில் வழங்கப்பட்ட, ரூ.3.11 லட்சம் கோடியுடன் ஒப்பிடுகையில், 34.70 சதம் கூடுதலாகும்.

# இந்தியா - தான்சானியா இடையே ரூபாயில் வர்த்தகம் துவங்கியது

புது தில்லி, ஜூலை 10

இந்தியாவுக்கும், தான்சானியாவுக்கும் இடையே, இந்திய ரூபாயில் வர்த்தகம் துவங்கிவிட்டதாக, வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. ஏற்கனவே கடந்த ஆண்டிலேயே, ஆர்பிஐ மற்றும் இந்திய நிதி அமைச்சகம், தான்சானியாவில் செயல்பட்டுவரும் இந்திய வங்கிகளான பேங்க் ஆப் இந்தியா, பேங்க் ஆப் பரோடா, கனரா பேங்க் ஆகியவற்றிடம் ஏற்றுமதி, இறக்குமதி பரிவர்த்தனைகளை, ரூபாயில் அதிகரிக்குமாறு கேட்டுக் கொண்டன.

இந்நிலையில் இப்போது இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டு உள்ளது. இது குறித்து, வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளதாவது: தான்சானியா அதிகஅளவில் ஏற்றுமதி செய்யும் நாடுகளில், இந்தியா முக்கிய இடம் வகிக்கிறது. ஆப்ரிக்காவுடன் இந்தியாவின் வர்த்தகம், 8 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு உள்ளது. மேலும், இந்தியாவின் ஆப்பிரிக்க முதலீடு, ரூ.6.15 லட்சம் கோடியாக உள்ளது. இந்தியா - தான்சானியா-விற்கான இருதரப்பு வர்த்தகம், மிகவும் வலுவான வளர்ச்சியைக் கண்டுள்ளது. கடந்த 2022 - 23ம் ஆண்டில் மட்டும், ரூ.52,000 கோடியாக உள்ளது. இந்திய ரூபாய் மற்றும் தான்சானிய ஷில்லிங்கில் ஏற்கனவே சில பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும் நிலையில், இந்த புதிய முயற்சி, இரு நாடுகளுக்கும் இடையே வர்த்தகத்தை மேலும் மேம்படுத்த உதவும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

